கடமைப்பட்டுள்ளேன். இந்தப் பேரவையில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மறைந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது பணிவான நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

59—

வீட்டுமனைப் பட்டா

***5388—திரு. மா. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதாப்பேட்டை தொகுதி, சைதாப்பேட்டையிலுள்ள கிராமநத்தம் பகுதியில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சைதாப்பேட்டை கிராமத்தில் கிராமநத்தம் பகுதியில் குடியிருக்கும் 1,127 வீட்டுமனைகள் கண்டெடுக்கப்பட்டு அவற்றில் 842 வீடுகள் 100 சதுர மீட்டருக்கு குறைவான பரப்பளவைக் கொண்ட வீடுகள் என்பதால் வட்டாட்சியர், மாம்பலம் அவர்களால் தோராயப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள நபர்களுக்கு தோராயப் பட்டா வழங்க ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 மார்ச் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதாப்பேட்டையில் உள்ள கிராமநத்தம் பகுதியில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா என்று நான் கேள்வி கேட்டிருந்தேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சைதாப்பேட்டை கிராமத்திலுள்ள 1,127 வீடுகளில் 842 வீடுகளுக்கு தோராயப் பட்டா வழங்கப்பட்டிருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். சைதாப்பேட்டை தொகுதியில் சைதாப்பேட்டை கிராமம் மட்டுமில்லை, கோடம்பாக்கம் கிராமம் இருக்கிறது, ஜமீன் மாம்பலம் கிராமம் இருக்கிறது, ஈக்காட்டுதாங்கல் கிராமம் இருக்கிறது, அரசுப்பண்ணை கிராமம் இருக்கிறது, கிண்டி கிராமம் இருக்கிறது, கோட்டூர் கிராமம் இருக்கிறது, இப்படி பத்துக்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. ஆகவே, சைதை தொகுதிக்குள் அடங்கிய அத்துணை கிராமங்களிலும் அவ்வளவு கிராமநத்தம் வீட்டுமனைகள் இருக்கின்றன. அவற்றுக்குப் பட்டா வழங்கிட வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை. அதற்காக மாண்புமிகு அமைச்சர் தனி வட்டாட்சியர் ஒருவரை அங்கே நியமித்து பட்டா வழங்கிட வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கின்றேன். அதோடுமட்டுமல்லாமல். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடம் இருங்கள். நீங்கள் கேட்ட கேள்வியில் சைதாப்பேட்டை தொகுதி, சைதாப்பேட்டையிலுள்ள கிராமநத்தம் பகுதியில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா என்றுதான் கேட்டிருக்கிறீர்கள். அதற்கு அதுதான் பதில். மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. மா. சுப்பிரமணியன்: *சைதாப்பேட்டையில் உள்ள கிராமநத்தம் என்று கேட்டிருக்கிறேன். சைதாப்பேட்டையில் உள்ள கிராமநத்தத்தில்தான் கேட்டிருக்கிறேனே தவிர, சைதாப்பேட்டை கிராமத்தில் என்று கேட்கவில்லை. சைதாப்பேட்டையில் உள்ள கிராமநத்தம் என்னும்போது, ஈக்காட்டுதாங்கல் கிராமம், கோடம்பாக்கம் கிராமம், ஜமீன் மாம்பலம் கிராமம், கோட்டூர் கிராமம், கிண்டி கிராமம், அரசுப்பண்ணை கிராமம் இதெல்லாம் சைதாப்பேட்டையில் இருக்கின்றன. அதனாலே, சைதாப்பேட்டையில் இருக்கிற கிராமங்களிலே*

கிராமநத்தம் வீடுகள் எவ்வளவு இருக்கிறதோ அத்தனைக்கும் பட்டா தரவேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. இன்னொன்று, சென்னையிலே சைதாப்பேட்டையிலே மட்டுமல்ல, ஒட்டுமொத்த சென்னையிலும் பல நூறு கிராமங்கள் இருக்கின்றன. Chennai Corporation இப்போது Greater Chennai Corporation–ஆக மாறிப்போய்விட்டது. இந்த நிலையில் இந்த கிராமங்கள் இருப்பது அவசியமா? அதனால் மாண்புமிகு அமைச்சர் ஒரு அரசாணையின்மூலம் இந்த கிராமநத்தம் என்கின்ற வகைப்பாட்டை மாற்றி இரயத்துவாரி வீட்டுமனைகளாக ஆக்கிவிட்டால் இந்தப் பட்டாக்களுக்கு பிரச்சினை இருக்காது.

முற்பகல் 10–55

இன்னொன்று என்னவென்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோன்று, தோராயப் பட்டா கொடுக்கிறார்கள். அதற்குப் பிறகு, தோராயப் பட்டாவைப் பெற்றவர்கள் வீட்டுமனைக்கான அனுமதி—வரைபடத்திற்கான திட்ட அனுமதி பெற, சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்குச் செல்லும்போது, அவர்களுக்கு நிறைய பிரச்சினைகள் வருகின்றன. மாநகராட்சியைப் பொறுத்தவரையில், 1+2–க்கு அனுமதி கொடுத்துவிடுகிறார்கள். ஆனால், CMDA–ல், இரயத்துவாரி மனைக்கு கொடுக்கின்ற சலுகையை இதற்குக் கொடுப்பதில்லை; பாரபட்சம் இருக்கிறது, பாகுபாடு இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது—ஒட்டுமொத்தமாக சென்னை இன்றைக்கு ஒரு பெருநகர மாநகராட்சியாக மாறியிருக்கின்ற நிலையில், நூற்றுக்கணக்கான கிராமங்களிலுள்ள, கிராம நத்தம் என்கின்ற வகைப்பாட்டை இரயத்துவாரி நிலங்கள் என்று மாற்றம் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்களின் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்திலுள்ள நலிந்த பிரிவினர்களின் முன்னேற்றத்திற்கு அடிப்படைத் தேவையான, வசிப்பதற்கு இடம் வழங்குவது என்பது மாண்புமிகு அம்மா அவர்களுடைய

2017 மார்ச் 21]

அரசின் நிலையான கொள்கையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில்தான், ஒப்படை செய்யக்கூடிய நிலங்கள் எங்கெங்கு உள்ளனவோ, அங்கெல்லாம், தகுதியுள்ள நபர்களுக்கு வீட்டுமனைகள் ஒப்படை செய்யப்பட்டு வருகின்றன. வருவாய்த் துறையின் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவில், கடந்த 5 ஆண்டுகளில் 12½ இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கிய ஒரே அரசு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "நான் சைதாப்பேட்டை கிராமம் மட்டுமல்ல, சைதாப்பேட்டை தொகுதி முழுவதும் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும் என்று கேட்டிருக்கிறேன்" என்று கூறினார். சைதாப்பேட்டை தொகுதியிலுள்ள நெசப்பாக்கம் கிராமம், கோடம்பாக்கம் கிராமம், மாம்பலம் கிராமம், சைதாப்பேட்டை கிராமம், விருகம்பாக்கம் கிராமம் போன்றவை வருவாய் கிராமங்கள் ஆகும். அதிலே, சைதாப்பேட்டை கிராமத்திலே 842 பேருக்கு தோராயப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தோராயப் பட்டா என்பது கணக்கீடுகள் முழுமையாக, அதாவது, வரன்முறைப்படுத்திக் கொடுக்கக்கூடிய பட்டா ஆகும். அதாவது, regular scheme–*ல் பட்டா கொடுக்கிறபோது, நிலத்தை ஆய்வு செய்து, தகுதியான இடங்களுக்கு பட்டா கொடுத்துவிடுகிறோம். மேலும், வரன்முறைப்படுத்தி, அதாவது, ஆக்கிரமிப்பு செய்திருக்கின்ற இடங்களை, ஆக்கிரமிப்பு செய்துள்ள அரசு இடங்களை ஆய்வு செய்து, தகுதியுள்ள நபர்களுக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து பட்டா வழங்கி வருகிறது. அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வகைப்பாடு மாற்றம் பற்றியும் சொன்னார்கள். தேவையான இடங்களில் வகைப்பாடு மாற்றங்களும் தொடர்ந்து செய்யப்பட்டுதான் வருகின்றன. இந்த நிலைப்பாட்டைப் பொறுத்தவரையில்,* regular scheme *என்கிற அடிப்படையில் நமக்கு இங்கு கேள்வி எழவில்லை. இங்கு* regularisation *என்கிற அடிப்படையில்தான் கேள்வி எழுகிறது. தோராய மதிப்பீடுகளிலே, அவர்கள் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். 100 சதுர மீட்டருக்கு மேல் பரப்பளவைக் கொண்ட இடங்களில் இருப்பவர்களுக்கு வட்டாட்சியர் அவர்கள் பட்டா வழங்க முடியாது. அதனால்தான், அது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்று நான் தெரிவித்திருக்கிறேன்.*

சைதாப்பேட்டை கிராமத்தில், கிராம நத்தம் பகுதியில் குடியிருக்கும் 1,127 வீட்டுமனைகள் கண்டெடுக்கப்பட்டு, அவர்களில் 842 பயனாளிகளுக்கு 100 சதுர மீட்டருக்கு குறைவான பரப்பளவைக் கொண்ட வீடுகள் என்பதால், வட்டாட்சியர், மாம்பலம் அவர்களால் தோராயப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், மீதமுள்ள 285 நபர்கள், 100 சதுர மீட்டருக்கு மேல் பரப்பளவைக் கொண்ட வீடுகளை அனுபவம் செய்து வருவதால், அவர்களுக்கு தோராயப் பட்டாக்கள் வழங்குவதற்கு, தகுதியுடைய அலுவலரான சென்னை உதவி மற்றும் நில வரித் திட்ட அலுவலருக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. அதேபோன்று, தோராயப் பட்டா என்பது permanent solution அல்ல. அந்தக் கணக்கீடுகள் கொடுப்பதற்கு 15 நாட்களுக்குப் பிறகு ஆட்சேபணைகள் தெரிவிப்பார்களேயானால், அவையும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். ஆட்சேபணைகள் இல்லையென்றால், அவர்களுக்கு நிரந்தரமான வீட்டுமனைப் பட்டாக்களும் வழங்கப்பட்டுதான் வருகின்றன. இதுதான் நடைமுறை. இந்த நடைமுறையின் அடிப்படையில்தான் சைதாப்பேட்டை தொகுதியில் அவர்களுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுவதைப்போல, அந்த இடங்கள் ஆக்கிரமிப்பு இடங்கள் அல்ல. வாய்க்கால் புறம்போக்கு போன்ற இடங்கள்தான் ஆக்கிரமிப்பு என்கின்ற வகைப்பாட்டில் வரும். சென்னையிலிருக்கிற நான் சொன்ன கிராமங்களிலெல்லாம், பல ஆண்டு காலம், பல நூறு ஆண்டு காலம் மக்கள் தொடர்ந்து வசித்துக் கொண்டு வருகிறார்கள். கிராம நத்தம் பகுதியில் வசிப்பவர்களுக்கு ஏற்கெனவே தாசில்தார் அவர்களால் Enjoyment Certificate வழங்கப்பட்டு வந்தது. தற்போது, கிராம நத்தம் என்கின்ற பகுதிகளுக்கு, 1996 ஆம் ஆண்டு, அன்றைய மரியாதைக்குரிய வருவாய்த் துறை அமைச்சர் திரு. நாஞ்சிலார் அவர்களால், தலைவர் கலைஞர் அவர்களும், வணக்கத்திற்குரிய தளபதியார் அவர்களும் எடுத்துச்சொன்னதற்கிணங்க, சென்னையில், எங்கெல்லாம் கிராம நத்தம் பகுதிகள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் Enjoyment Certificate–க்கு பதிலாக

2017 மார்ச் 21]

பட்டா வழங்கிட வேண்டும் என்கின்ற அறிவுறுத்தல் வழங்கப்பட்டு, தனி வட்டாட்சியர்கள் நியமிக்கப்பட்டார்கள். தொடர்ந்து அந்தப் பணி நடைபெறாமல் போனதால்தான், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல இன்னமும் அந்தப் பணிகள் முழுமையடையாமல் இருக்கின்றன. எனவே, ஒட்டுமொத்தமாக சென்னை மாநகரைப் பொறுத்தவரையில், கிராம நத்தம் பகுதிகள் என்கின்ற வகைப்பாட்டை, இரயத்துவாரி மனைகள் என்று மாற்றம் செய்வது மட்டுமே, இதற்கு ஒரு சரியான நிரந்தரத் தீர்வாக இருக்கும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "அங்குள்ள நிலங்கள் ஆக்கிரமிப்பு நிலங்கள் அல்ல; மக்கள் குடியிருக்கிறார்கள்" என்று கூறினார். நான் அதற்குள் போகவில்லை. அரசின் நிலங்களில் குடியிருப்பவர்களுக்கு,* regularisation–*ல் என்ன சொல்லியிருக்கிறோம் என்றால்,—*under regularisation of encroachment scheme *என்றுதான் அதில் இருக்கிறது. அதுபோக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போன்று நத்தம் புறம்போக்கு இருக்கிறது.* Town settlement survey *என்கிற வகையிலும் நாம் கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். ஆகவே, நான்கு வகையான நிலைப்பாடுகளிலே நாம் கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம்.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகின்றது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *இந்த நிலையைப் பொறுத்தளவிலே, வகைப்பாடு மாற்றப்படவேண்டிய அவசியம் கிடையாது. அது அளவீட்டின் அடிப்படையிலேதான் ஆய்விற்காக சென்றிருக்கிறதேயொழிய, வகைப்பாடு காரணமாக அது நிறுத்தப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட கப்பியறை பேரூராட்சி, சிந்தன்விளை கிராமத்திலே அரசுப் பள்ளி புறம்போக்கு இடத்திலே 12 குடும்பங்கள் சுமார் 50 ஆண்டுகளாக வசித்து வருகிறார்கள். அவர்கள் பட்டா வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். பலமுறை மாவட்ட ஆட்சியர் அவர்களையும், R.D.O. அவர்களையும் சந்தித்தும், பல்வேறு கோரிக்கைகளை வைத்தும் இன்று வரை பட்டா வழங்கப்படவில்லை. ஆகவே, அந்தப் பகுதி மக்களுக்கு பட்டா வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடற்ற ஏழையெளிய மக்களுக்கு அவர்கள் தாமாக ஒரு இல்லத்தினை உரிமையாக்கும் வகையில் அதற்கு ஏதுவாக அரசு வருவாய் நிலை ஆணை எண் 21–ன்கீழே வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் உள்ளது. ஆகவே, அந்த வரையறைக்குட்பட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இடம் இருக்குமேயானால், அவர்களுக்கு உடனடியாக மனைப்பட்டா வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.

திரு. சே. கருணாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை தொகுதி, ஆர்.எஸ். மங்கலம் பேரூராட்சியில் அரசூரணி தென்கரைபட்டறைப் பகுதியில் வசிக்கும் வீடற்ற சுமார் 250 குடும்பங்கள் வாடகை வீட்டில் வசித்துவரும் ஏழைத் தொழிலாளர் வர்க்கத்தைச்

2017 மார்ச் 21]

சார்ந்தவர்கள். இம்மக்கள் கடந்த நான்கு ஆண்டுகளாக மாவட்ட ஆட்சியரிடம் மனு செய்து, மனைப் பட்டாக்கள் பெறுவதற்கு தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார்கள். எனவே, வீடற்ற ஏழைத் தொழிலாளர் வர்க்கத்தைச் சார்ந்த இவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி மறைந்த அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யுமா என்பதை எனது சார்பாகவும், எனது திருவாடனை தொகுதி மக்கள் சார்பாகவும், நான் சார்ந்த முக்குலத்தோர் புலிப்படை சார்பாகவும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுமனை வழங்குவதற்கு அரசாணை நிலை எண் 21–ன்கீழே சில வரையறைகள் இருக்கின்றன. அதன்படி, கிராமப்புறங்களைப் பொறுத்தளவிலே, குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூபாய் 30 ஆயிரத்திற்குக் குறைவாக உள்ளவர்களுக்கும், நகர்ப்புறங்களைப் பொறுத்தளவிலே குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூபாய் 50 ஆயிரத்திற்குக் குறைவாக உள்ளவர்களுக்கும் வீட்டுமனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போதுள்ள திட்டத்தின்கீழ் regular scheme–ன்கீழே கிராமங்களில் 3 சென்ட், நகராட்சி எல்லைக்குள் ஒன்றரை சென்ட், மாநகராட்சி எல்லைக்குள் ஒரு சென்ட் என்ற அளவிலே வீட்டுமனைக்காக நிலம் ஒப்படை செய்யப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது இந்த நிலை ஆணை எண் 21–ன்கீழே, வரையறைக்குட்பட்டு வரும் என்கிற பட்சத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*